2013 மார்ச் 28]

17 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 31 தொழிற்சாலைகள் குறுகிய காலத்திலே தொழிலை ஆரம்பிக்கவிருக்கின்றன. 1,000 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டுடன், சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அரியலூர் சிமெண்ட் ஆலையில் 5 இலட்சம் டன்னும், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 2 இலட்சம் டன்னும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட புகளூர் காகித ஆலையில் 2 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய சிமெண்ட் ஆலையும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது தென் மாவட்டங்களிலே பல சலுகைகளை அறிவிக்க இருக்கின்றார்கள். அந்த வகையிலே புதிய தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோர் வருகின்றபோது மானாமதுரைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்னுரிமை தரப்படும் எனக் கூறியதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

நூற்பாலை நவீனமயமாக்கல்

***6034—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் இயந்திரங்களை நவீனப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் செயல் திறன் மற்றும் நிதிநிலைமையை முன்னேற்றும் விதமாக இயங்கிவருகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தென்னிந்திய துணி நூல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில், ஆய்வினை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் ரூபாய் 104.41 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வாயிலாக, புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் இயங்கிவரும், பாரதி கூட்டுறவு நூற்பாலை இயந்திரங்களை நவீனப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18.73 கோடி ரூபாய் நிதியாக வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

மாணவர் விடுதி

***15289—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—